THIRU K. M. SUBRAMANIAN : In view of the fact that there is a very huge number of students according to the teacher-student ratio, and there is considerable unemployment in this country and in view of the fact that ladies are more fit to undertake the teaching profession, is it possible for the Hon. Minister to reconsider the matter and increase the strength of the trainees in the training course at least women training teachers to the 1970-71 level ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது பயிற்சி பெற்று வேலையில்லாமல் பல ஆசிரியர்களும், ஆசிரியைகளும் இருக்கிறார்கள். இன்னும் 2, 3 ஆண்டுகளில் அவர்களைக் கணக்கிட்டு எவ்வளவு தேவைப்படுகிறார்கள் என்று பார்த்து, பயிற்சிப் பள்ளிகளில் பிரிவுகள் ஒதுக்கப்படவிருக்கிறது. திட்டமான முறையில் ஆசிரியர்களைச் சேர்ப்பது பற்றியோ, ஆசிரியைகளைச் சேர்ப்பது பற்றியோ ஒன்றும் சொல்வதற்கில்லை, அதில் பல பிரச்சினைகள் ஏற்படக்கூடும். இது பற்றி பல கேள்விகள் எழுப்பப் பட்டிருக்கின்றன. ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளிலிருந்து அதிகமாக வந்து கொண்டேயிருக்கிறார்கள். மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கு வேலைவாய்ப்புக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் ஆசிரியைகளுக்கு அதிக ஊக்கம் தரவேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, தற்போது திட்டவட்டமான எண்ணிக்கை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. தேவையான அளவுக்கு அவர்களுக்கு இடம் ஒதுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : திரு. கே. என். குமாரசாமி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் இடத்தில் இல்லாத காரணத்தால் திரும்பப்பெற்றதாகக் கருதப் படுகிறது.

(4) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்து வாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு இனம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.